
# இலங்கையில் மாற்றுக் கருத்துக்களுக்கு எதிரான அடக்குமுறை

## நொவம்பர் 2014



A destroyed opposition political office: The month of November marked the beginning of a series of attacks on political opposition ( Photo: CaFFE)

**INFORM** Human Rights Documentation Centre
www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

**உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்**


அ. **அரசாங்கத்திற்கு எதிரானவர்களாகப் பார்க்கப்பட்டவர்களைக் கொல்லுதல், ஆட்கடத்தல் மற்றும் அச்சுறுத்தல்**

ஆ. **பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்**

இ. **வடக்கில் தமிழரை நினைவுகூருவதற்கு தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்**

ஈ. **மாணவ செயற்பாட்டாளர்களின் அடக்குமுறை**

உ. **எதிரணி அரசியல் கட்சிகளை அடக்குதல்**


*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் இன்ஃபோர்ம் 1990*
*INFORM நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதுகுறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய .*
*சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் ,தேசிய ,உள்ளூர் .சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது*
*வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும்அது ,அறிக்கைகளை வெளியிடுவதிலும் ,*
*படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற .தன்னை ஈடுபடுத்திக் கொண்டது*
*தற்போது .சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது*
*தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச ் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித*
*உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது .*
*இலங்கையில் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடுஉள்ளூர் ,*
*,குழுக்கள் வலைப்பின்னல்களுடனும் ,செயற்பாட்டாளர்கள்பிராந்திய சர்வதேச மனித (ஆசிய)*
*.உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது*

## சாராம்சம்

மாதக்கணக்கான ஊகங்களின் பின்னர், ஜனாதிபதி தேர்தல் 2015 ஜனவரி 8ஆம் திகதி நடைபெறுமென உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இது ஜனாதிபதி தேர்தல் நடப்பதற்கு அண்ணளவாக இரண்டு வருடங்களுக்கு முற்பட்டதாகும். கட்சியின் ஒரு மிகவும் சிரேஷ்ட கட்டுறதிவாய்ந்த ஒருவரும், ஜனாதிபதி ராஜபக்ஷவின் கீழுள்ள அமைச்சர் ஒருவருமான ஆளும் கட்சியின் பொதுச் செயலாளர் "இணை எதிரணி அபேட்சகராக" எதிரணிக் கட்சிகளின் கூட்டணியொன்றினால் தெரிவுசெய்யப்பட்டார். எதிரணி அரசியல்வாதிகளினதும், அவர்களது ஆதரவாளர்களினதும் மீதான அடக்குமுறை பெரிதும் உடனடியாகவே ஆரம்பித்தது. ஆளும் கூட்டணியிலிருந்து அமைச்சுரீதியிலான பதவிநிலைகளிலிருந்து தமது கட்சி வெளியேறுகிறது என ஜாதிக ஹெல உறுமய அறிவித்து சில நாட்களின் பின்னர் ஆத்திரமடைந்த கும்பலொன்றினால் கட்சியின் தலைவர் வண. அதுரலிய ரத்ன தேரரின் ஆலயம் சுற்றிவளைக்கப்பட்டது. வாகனப் பாதுகாப்பணி ஒன்றின் மீதான தாக்குலொன்றின் போது இலங்கையின் பிரதான எதிரணியான ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவரின் தலை மீது சுடப்பட்டது. ஆளும் கட்சியின் பக்கத்திற்கு வடக்கிலும், கிழக்கிலும் உள்ள நகர சபைகளின் அடிமட்ட தமிழ் உறுப்பினர்களைத் தமது பக்கம் இழுப்பதற்காக ஜனாதிபதியின் சகோதரர்களான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் நேரடியான ஆதிக்கத்தின் கீழ் செயற்படும் "புலனாய்வு மற்றும் அரசியல் பணியாளர்கள்" முயல்வதாக செய்தி அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. பாதுகாவலில் உள்ள அவரது மகன் விடுவிக்கப்பட வேண்டும் என அவர் விரும்பினால் ஆளும் கட்சிக்கு கட்சி மாறும் விருப்பு வடக்கில் உள்ள நகர சபையின் உறுப்புனர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

வடக்கிலும், நாட்டின் வேறு பகுதிகளிலும், பேச்சுச் சுதந்திரமும் பயமுறுத்தலின் கீழ் இருந்தது. பொது எதிரணி வேட்பாளரின் முதலாவது தொலைக்காட்சி நேர்முகங்காணலானது நொவம்பர் 22 அன்று இலங்கையின் தனியார் தொலைக்காட்சிச் சேவை வழங்குனர்களால் தடைசெய்யப்பட்டது. அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் கடுமையாக விமர்சித்திருந்த அரசியல் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு இடம் வழங்கக்கூடாதென யாழ்ப்பாணம் பத்திரிகைக் கழகத்தினை இராணுவப் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தினார்கள். வட மாகாணத்தில் தமிழ் இதழியலாளர்களை இராணுவம் அச்சுறுத்தியதாகவும், விசாரணை செய்ததாகவும் அத்துடன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைபெறுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த இதழியலாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வொன்று இரத்துச் செய்யப்படுவதற்கு கட்டுப்படுத்தியதாகவும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டியிருந்தார். இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியீடொன்றான ~அத்த' செய்திப்பத்திரிகை விநியோகத்திலிருந்து மீளப்பெறப்பட்டதுடன், கட்சி உயர் பீடத்தினால் நொவம்பர் 7 அன்று அதன் செய்திப்பத்திரிகை அலுவலகமும் பொறிவைக்கப்பட்டது.

தனது கடத்தப்பட்டதும், காணாமல்போனதுமான கணவரான மதுஷ்க ஹரிஸ் டி சில்வாவுக்கான பொறுப்புக்கூறுதலுக்காகவும், நீதிக்காகவும் போராடிய தாயொருவரான திருமதி மயூரி இனோகா ஜயசிங்க அனுராதபுரம் நகரத்தில் நொவம்பர் 1 அன்று கடத்தப்பட்டார். முன்னைய மாதங்களில் அவர் பெருமளவு தடவைகள் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டிருந்தார். கல்வியைத் தனியார்மயப்படுத்துவதற்கு எதிராக கையொப்பங்களைப் பெற்றுக்கொண்டிருந்த பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர்

சம்மேளனத்தைச் சேர்ந்த மாணவர்களை ஜனாதிபதியின் மகனான பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் தலைமை தாங்கப்பட்ட அரசியல் இயக்கமொன்றான ~நீலப் படை' என்ற குழு தாக்கியது.

கடந்த காலத்தைப் போன்று, நொவம்பர் 27இலும், 26இலும் முறையே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தினமான "மாவீரர் தினம்"; மற்றும் எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனின் பிறந்த தினம் ஆகியவற்றின் போதும், அதற்கு முன்னரும் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இராணுவ ஆளணியினர் உறுதிப்படுத்தியிருந்தனர். நொவம்பர் 3 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவருக்கும், நான்கு மாணவ செயற்பாட்டாளர்களுக்கும் எதிராக மரண அச்சுறுத்தல்களைத் தாங்கிய கைகளால் எழுதப்பட்ட சுவரொட்டிகள் பல்கலைக்கழக வளவில் ஒட்டப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நொவம்பர் 27 அன்று மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதிலிருந்து செயற்பாட்டாளர்களையும், மாணவர்களையும் தடுப்பதற்கான ஆரம்பநிலையிலான பணியாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அருகில் இரு ~கண்காணிப்பு நிலையங்கள்' உருவாக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழகச் சனசமூகத்தின் மீது அதன் பிரசன்னத்தையும், அழுத்தத்தையும் இலங்கையின் இராணுவம் அதிகரித்த பின்னர் நொவம்பர் 26இலிருந்து டிசம்பர் 1 வரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் உத்தியோகபூர்வமாக மூடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் இரு புகுவழிகளின் முழுமையான கட்டுப்பாட்டினை நூற்றுக்கணக்கான பெரும் ஆயுதபாணியிலான இராணுவ ஆளணியினர் எடுத்திருந்ததுடன், விடுதிகள் உட்பட பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுமாறு சகல மாணவர்களுக்கும் உத்தரவிட்டிருந்தனர். நொவம்பர் 27 அன்று மாவீரர் தினத்தன்று பல்கலைக்கழகத்தின் வளவின் உள்ளே பிரசன்னமாகியிருந்த விரிவுரையாளர்களினதும், மாணவர்களினதும் பதிவுகளைச் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புக் காவலர்களுக்கு பொலிசின் பயங்கரவாத விசாரணைப் பிரிவு உத்தரவிட்டிருந்தது. இந்த இயக்கத்திற்கு பின்னால் இருந்த மாணவர்களை அடையாளம் காண்பதற்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவுடன் இணங்குமாறு பல்கலைக்கழக நிருவாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. அதே நாளன்று, பல்கலைக்கழகத்தின் உள்ளே அழிக்கப்பட்ட மாவீரர் நினைவு தூபியின் முன்னால் இராணுவம் பணிக்கமர்;த்தப்பட்டதுடன், பகுதியில் கால்நடையிலான ரோந்தினையும், எழுந்தமான வீதிச் சோதனைகளையும் இராணுவம் அதிகரித்திருந்தது.

எல்.ரி.ரி.ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தைக் கொண்டாடியதாக சார்த்துரைத்து, வட மாகாணத்தில் உள்ள முன்னணிவாய்ந்த தமிழ்ச் செய்திப்பத்திரிகையான ~உதயனை' விசாரிப்பதற்கு இலங்கையின் புலனாய்வு அலுவலர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். தமிழ் ஈழம் மாவீரர் தினச் சுவரொட்டிகளை வைத்திருந்ததாக ஓர் இளம் தமிழ் செயற்பாட்டாளரைப் பொலிசின் பயங்கரவாத விசாரணைப் பிரிவு விசாரணை செய்ததுடன், நொவம்பர் 25 அன்று இராணுவ வீரர்களால் அவர் கைது செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. நொவம்பர் 26 பிற்பகல் வேளை இலங்கையின் இராணுவ ஆளணியினரால் தமிழர் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டதுடன், அலுவலக வாசலில் புலனாய்வு அலுவலர்கள் நிலை கொண்டிருந்தனர். நொவம்பர் 25 அன்று, தமிழ் (எல்.ரி.ரி.ஈ.) மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தமிழ் பக்தர்கள் ஒன்றுகூடியிருந்ததாக சார்த்துரைத்து, திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் மேற்கில் முன்னம்-போடி-வெட்டையில் பிள்ளையார் ஆலயத்தில் (இந்து) பூசையொன்றுக்காக ஒன்றுகூடியிருந்த பக்தர்களை இலங்கையின் இராணுவப் புலனாய்வாளர் துரத்தியடித்தனர். சைவ பக்தர்கள் சம்பிரதாயபூர்வமான பொங்கலைத் தயாரித்துக்கொண்டிருந்த பானையையும் இராணுவ வீரர்கள் உடைத்தெறிந்தனர்.

நொவம்பர் 12 அன்று இரவு வேளை மன்னார் மாவட்டத்தில் உள்ள வெள்ளாங்குளத்தில் ஆண் ஒருவரை அடையாளம் காணமுடியாத துப்பாக்கிதாரிகள் சுட்டுக்கொன்றனர். பலியான 34 வயதான நகுலேஸ்வரன் கிருஷ்ணசுவாமி இலங்கை மீதான நடந்துகொண்டிருக்கும் ஐ.நா. விசாரணைக்கு சான்றினைச் சமர்ப்பிக்குமாறு தமிழர்களை ஊக்குவிப்பதில் ஈடுபட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பிராந்தியத்தில் உள்ள புனர்வாழ்வளிக்கப்படாத எல்.ரி.ரி.ஈ. போராளிகள் அல்லது ஆதரவாளர்கள் பற்றிய தகவலை வழங்குமாறு இராணுவப் புலனாய்வு அலுவலர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அவர் மறுத்திருந்ததால் அவர் கொல்லப்பட்டார் என இன்னொரு காரணத்தை ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன.

சில சம்பவங்களையிட்டு விசாரணைகளைப் பொலிசார் அறிவித்திருந்த போதிலும், உண்மையான விளைவுகள் மீது புதுப்பித்தல்கள் இருக்கவில்லை என்பதுடன், கடந்த காலத்தைப் போன்று, தற்காலப் போக்காக விலக்கீட்டுரிமை விளங்கியது. இராணுவத்தினாலான மீறல்கள் குறித்து ஏதேனும் விசாரணை அனேகமாக இடம்பெறவில்லை.



INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம்
www.ihrdc.wordpress.com / informcolombo@gmail.com


## இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை -நொவம்பர் 2014: சம்பவங்களின் பட்டியல்

| | சம்பவங்களின் திகதி | சம்பவங்களின் இடம் (மாவட்டம்) | சம்பவங்களின் விவரணம் | மூலம் |
|---|---|---|---|---|
| அ. அரசாங்கத்திற்கு எதிரானவர்களாகப் பார்க்கப்பட்டவர்களைக் கொல்லுதல், ஆட்கடத்தல் மற்றும் அச்சுறுத்தல் | | | | |
| 1 | 20 நொவம்பர் | கொழும்பு மாவட்டம் | அதுரலிய ரத்ன தேரரின் ஆலயம் சுற்றிவளைக்கப்பட்டது | http://www.ft.lk/2014/11/21/athuraliye-rathana-theros-temple-surrounded/ |
| 2 | 1 நொவம்பர் | நொச்சியாகம (அனுராதபுரம் மாவட்டம்) | தனது காணாமல் போன கணவருக்காகப் பிரச்சாரம் நடத்திய பெண்ணொருவர் கடத்தப்பட்டார் | http://srilankabrief.org/2014/11/mother-twins-wife-disappeared-abducted-threatened-abused-fighting-justice/#more-20985 |
| 3. | 12 நொவம்பர் | மன்னார் மாவட்டம் | மன்னாரில் தமிழ் செயற்பாட்டாளரைத் துப்பாக்கிதாரிகள் கொலைசெய்தனர் | http://www.tamilguardian.com/article.asp?articleid=12834 |
| ஆ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல் | | | | |
| 4. | 22 நொவம்பர் | கொழும்பு மாவட்டம் | "சிரச"வில் நிகழ்ச்சி தடைசெய்யப்பட்டது. | http://www.colombopage.com/archive_14B/Nov22_1416678446CH.php |
| 5. | 19 நொவம்பர் | யாழ்ப்பாண மாவட்டம் | வடக்கில் இன்னொரு ஊடக செயலமர்வு ரத்துச் செய்யப்பட்டது | http://www.lankaviews.com/en/index.php?option=com_content&view=article&id=12024:military-shows-its-force-in-the-north-journalists-threatened&catid=150:lead-news&Itemid=113 |
| 6. | 18 நொவம்பர் | யாழ்ப்பாண மாவட்டம் | யாழ்ப்பாண பத்திரிகைக் கழகத்தை புலனாய்வு ஆளணியினர் அச்சுறுத்தினர் | https://twitter.com/jaffnapressclub |
| 7. | 7 நொவம்பர் | கொழும்பு மாவட்டம் | அதன் சொந்த செய்திப்பத்திரிகையை கம்யூனிஸ்ட் கட்சி தணிக்கை செய்கின்றது | http://archive.srilankamirror.com/news/17774-aththa-withdrawn-from-circulation-office-sealed |
| இ. வடக்கில் தமிழரை நினைவுகூருவதற்கு தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் | | | | |
| 8. | 25 நொவம்பர் | திருகோணமலை மாவட்டம் | சமய நிகழ்ச்;சியிலிருந்து பக்தர்கள் விரட்டப்பட்டனர் | http://tamilnet.com/art.html?catid=13&artid=37521 |
| 9. | 26 நொவம்பர் | கொழும்பு மாவட்டம் | ~உதயன்| செய்திப்பத்திரிகை குறித்து இலங்கைப் புலனாய்வாளர்கள் விசாரணையை ஆரம்பித்தனர் | http://www.tamilguardian.com/article.asp?articleid=12949 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | 25 நொவம்பர் | யாழ்ப்பாண மாவட்டம் | மாவீரர் தினச் சுவரொட்டியை வைத்திருந்ததிற்காக தமிழ் இளைஞர் கைது | http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37508 |
| 11. | 3 நொவம்பர் | யாழ்ப்பாண மாவட்டம் | அச்சுறுத்தும் சுவரொட்டிகள் குறித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் நாமமிடப்பட்டனர் | http://www.colombomirror.com/?p=1256 |
| 12. | 27 நொவம்பர் | யாழ்ப்பாண மாவட்டம் | யாழ்ப்பாணத்தின் "தியாகச் சுடரை" ஏற்றிய மாணவர்களின் பெயர்களை இராணுவம் பெற்றது | http://tamilnet.com/art.html?catid=13&artid=37529 |
| 13 | 25 நொவம்பர் | யாழ்ப்பாண மாவட்டம் | யாழ்ப்பாணத்தில் இராணுவக் கண்காணிப்பு அதிகரித்தது | http://tamilnet.com/art.html?catid=13&artid=37507 |
| 14. | 26 நொவம்பர் | யாழ்ப்பாண மாவட்டம் | நினைவுதினச் செயற்பாடுகளுக்கு பயந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மூடப்பட்டது | http://www.colombomirror.com/?p=1256 |
| 15. | 26 நொவம்பர் | யாழ்ப்பாண மாவட்டம் | இலங்கை இராணுவ ஆளணியினரால் தமிழ் அரசியல் கட்சி அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டது | http://www.tamilguardian.com/article.asp?articleid=12950 |
| **ஈ. மாணவ செயற்பாட்டாளர்களின் அடக்குமுறை** | | | | |
| 16. | 24 நொவம்பர் | மாவட்டம் ? | பல்கலைக்கழக மாணவர்களின் கையொப்ப இயக்கம் தாக்கப்பட்டது | http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7851:banner-for-education-causes-namals-thugs-to-stampede-&catid=42:smartphones&Itemid=74 |
| **உ. எதிரணி அரசியல் கட்சிகளை அடக்குதல்** | | | | |
| 17. | | வடக்கும், கிழக்கும் | தமிழ் கட்சியின் நகர சபை உறுப்பினர்களைக் கட்சி மாறும்படி அரசாங்கம் அச்சுறுத்துகின்றது | http://tamilnet.com/art.html?catid=13&artid=37524 |
| 18. | 21 நொவம்பர் | கொழும்பு மாவட்டம் | எதிரணி அரசியல் கட்சிகளுக்கு எதிராக தேர்தல் வன்முறை | http://www.colombomirror.com/?p=1202 |

## அ. அரசாங்கத்திற்கு எதிரானவர்களாகப் பார்க்கப்பட்டவர்களைக் கொல்லுதல், ஆட்கடத்தல் மற்றும் அச்சுறுத்தல்

### 1. அதுரலிய ரத்ன தேரரின் ஆலயம் சுற்றிவளைக்கப்பட்டது



ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து அமைச்சுரீதியிலான பதவிநிலைகளிலிருந்து ஜாதிக ஹெல உறுமய கட்சி வெளியேறுவதாக அறிவித்த சில நாட்களின் பின்னர், ஆத்திரமடைந்த கோஷ்டியொன்றினால் கட்சியின் தலைவரின் தலைமையிலான ஆலயம் சுற்றிவளைக்கப்பட்டதனால் நேற்று பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. நொவம்பர் 20 அன்று ராஜகிரியவில் (கொழும்பு மாவட்டம்) உள்ள ரத்ன தேரரின் சத்தஹம் செவன ஆலயம் அடையாளம் காணப்படாத எதிர்ப்பாளர்களினால் சுற்றிவளைக்கப்பட்டதுடன், அவர் அரசாங்கக் காணியில் சட்டவிரோதமாகக் குடியிருப்பதாகவும் சார்த்துரைத்தது. ஜனாதிபதியினால் தேர்தல் பற்றி அறிவிக்கப்படுவதற்கு முன்னர் அச்சுறுத்தலின் முதலாவது முயற்சியாக இச் சம்பவத்தை தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(மேலே: அதுரலிய ரத்ன தேரரின் புகைப்படம் - colombogazette)

http://www.ft.lk/2014/11/21/athuraliye-rathana-theros-temple-surrounded/

### 2. தனது காணாமல் போன கணவருக்காகப் பிரச்சாரம் நடத்திய பெண்ணொருவர் கடத்தப்பட்டார்



தனது கடத்தப்பட்டதும், காணாமல் போனதுமான கணவரான மதுஷ்க ஹறிஸ் டி சில்வாவுக்கு பொறுப்புக்கூறுவதற்கும், நீதிக்கும் போராடும் தாயொருவரான திருமதி மயூரி இனோகா ஜயசிங்க அனுராதபுரம் நகரத்தில் நொவம்பர் 1 அன்று கடத்தப்பட்டார். அவர் உயிர்வாழ வேண்டுமானால், அவரது கணவர் மதுஷ்கவின் சார்பாக பிரச்சாரம் நடத்தக்கூடாது என அச்சுறுத்திய ஆட்கடத்தல்காரர்கள் அவரை அனுராதபுரத்தில் இருந்து சுமார் 30 கி.மீ. தூரத்தில் உள்ள நொச்சியாகமவில் (அனுராதபுரம் மாவட்டம்) இறக்கிவிட்டார்கள். ஒரு வயதான இரட்டை மகன்களில் தாயொருவராக இனோகா விளங்குகிறார். "நீ அதிகம் கதைக்கின்றாய். நீ உயிர் வாழ வேண்டுமா அல்லது இறக்கவேண்டுமா என்பதை நீ தான் முடிவுசெய்ய வேண்டும். நீ மேடைகளில் ஏறுகின்ற போதிலும், நீ அதிகளவு தூரம் செல்வதை நாம் விடமாட்டோம். உனது கணவரைத் தேடுவதை நிறுத்திவிடு" என ஆட்கடத்தல்காரர்கள் மயூரியை அச்சுறுத்தியுள்ளனர். "நான் கொல்லப்பட்டால் எனது இரட்டை மகன்களுக்கு என்ன நடக்கும் என்பதையிட்டு நான் மிகவும் பயந்தேன்" என்கிறார் மயூரி. "என்னைக் கடத்தியவர்கள் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்கள் போல எனக்குத் தெரிந்தது" என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆட்கடத்தல்காரர்களினால் அவர் இறக்கப்பட்டு, பத்து நிமிடங்களின் பின்னர், அங்கு நொச்சியாகம பொலிசார் வந்து, அவரைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். பாலியல் தொழிலாளியொருவராக பொலிஸார் தன்னை நடத்தியதாகவும், கெட்ட வார்த்தைகளால் அவர்கள் தன்னை ஏசியதாகவும் பீ.பீ.சி. சிங்கள சேவைக்கு மயூரி கூறியிருந்தார்.

(மேலே வலது புறம்: மயூரி இனோகா ஜயசிங்க: புகைப்படம் – SriLanka Brief)
http://srilankabrief.org/2014/11/mother-twins-wife-disappeared-abducted-threatened-abused-fighting-justice/#more-20985

### 3. மன்னாரில் தமிழ் செயற்பாட்டாளரைத் துப்பாக்கிதாரிகள் கொலைசெய்தனர்



நொவம்பர் 12 இரவு மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளத்தில் எல்.ரி.ரி.ஈ. பொலிஸ் திணைக்களத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் சுட்டுக் கொன்றனர். தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பெரும் அட்டூழியங்களையிட்டு ஐ.நா. விசாரணைக்கு சாட்சியங்களைச் சமர்ப்பிப்பதற்கு தமிழர்களை ஊக்குவிப்பதில் கொல்லப்பட்ட 34 வயதான நகுலேஸ்வரன் கிருஷ்ணசுவாமி ஈடுபட்டிருந்தார். பிராந்தியத்தில் உள்ள புனர்வாழ்வளிக்கப்படாத எல்.ரி.ரி.ஈ. போராளிகள் அல்லது ஆதரவாளர்கள் பற்றி தகவலை வழங்குமாறு நகுலேஸ்வரனை இராணுவப் புலனாய்வு அலுவலர்கள் வலியுறுத்தியிருந்த போதிலும், அவர் மறுத்துவிட்டதாக உள்ளூர் வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

(இடது புறம்: – நகுலேஸ்வரன் கிருஷ்ணசுவாமி: புகைப்படம் Tamil Net)
http://www.tamilguardian.com/article.asp?articleid=12834

## ஆ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்

### 4. “சிரச”வில் நிகழ்ச்சி தடைசெய்யப்பட்டது.

நொவம்பர் 22 அன்று பொது எதிரணி அபேட்சகரின் முதலாவது தொலைக்காட்சிப் பேட்டி இலங்கையின் தனியார் தொலைக்காட்சி சேவை வழங்குனர்களினால் தடைசெய்யப்பட்டது. பொது எதிரணி அபேட்சகரையும், மற்றும் வேறு பெருமளவு எதிரணி உறுப்பினர்களையும் பேட்டிகாணப்பட்ட “சட்டன” நிகழ்ச்சியை ஒளிபரப்புவதிலிருந்து பியோ ரி.வி. கேபிள் ரெலிவிஷன் நெட்வேர்க்கினாலும், டயலொக் ரி.வி. சற்றலைட் ரெலிவிஷன் நெட்வேர்க்கினாலும் சிரச தொலைக்காட்சி தடைசெய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. நிகழ்ச்சி நேரடியாக இணையதளத்தில் மேலேற்றப்பட்டிருந்தது. MTV/MBC மீடியா நெட்வேர்க்கின் சிரச, சக்தி மற்றும் எம்.ரி.வி விளையாட்டு அலைவரிசைகளை பியோ ரி.வி. கேபிள் ரெலிவிஷன் நெற்வேர்க் மற்றும் டயலொக் ரி.வி. சற்றலைட் ரெலிவிஷன் நெட்வேர்க் ஆகியன தடைசெய்திருந்தன. நிகழ்ச்சியில் பொது எதிரணி அபேட்சகர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன, ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திசநாயக்க ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.
http://www.colombopage.com/archive_14B/Nov22_1416678446CH.php

### 5. வடக்கில் இன்னொரு ஊடக செயலமர்வு ரத்துச் செய்யப்பட்டது

வட மாகாணத்தில் இதழியலாளர்களை இராணுவத்தினர் தொடர்ந்துமே அச்சுறுத்தி வருவதாக த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் குறிப்பிட்டுள்ளார். உள்ளூர் இதழியலாளர்களை அடக்குவதற்கு பலதரப்பட்ட நடவடிக்கைகளை இராணுவத்தினர் எடுப்பதாக அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அவரின் கூற்றின்படி, கடந்த சில தினங்களில் ஒரு தொகையிலான இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்ட அதேவேளை, யாழ்ப்பாணத்தில் வாழும் இதழியலாளர்களில் ஒருவரும், அவரது குடும்ப உறுப்பினர்களும் இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டுள்ளனர். இப் பிரச்சனையின் காரணமாக, காங்கேசன்துறையில் (யாழ்ப்பாணம் மாவட்டம்) நடைபெறுவதற்கு இருந்த இதழியலாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு ரத்துச்செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.
http://www.lankaviews.com/en/index.php?option=com_content&view=article&id=12024:military-shows-its-force-in-the-north-journalists-threatened&catid=150:lead-news&Itemid=113

### 6. யாழ்ப்பாண பத்திரிகைக் கழகத்தை புலனாய்வு ஆளணியினர் அச்சுறுத்தினர்

யாழ்ப்பாணம் பத்திரிகைக் கழகத்தினால் அனுப்பப்பட்ட இணையதள குறிப்பின் பிரகாரம், ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) என்ற அரசியல் கட்சிக்கு இடமளிக்க வேண்டாமென அவர்களை இராணுவ ஆளணியினர் அச்சுறுத்தியுள்ளனர்.

**Jaffna Press Club** @JaffnaPressClub · Nov 18

#GOSL trying to stop us from traveling to North. Used intelligence personnel to threaten @JaffnaPressClub not to host our Press Conf.#JVP

### 7. அதன் சொந்த செய்திப்பத்திரிகையை கம்யூனிஸ்ட் கட்சி தணிக்கை செய்கின்றது

இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியீடொன்றான ~அத்த' செய்திப்பத்திரிகை அலுவலகம் பொறிவைக்கப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அழகியல் கலைகள் பிரிவின் முன்னாள் தலைவர் கலாநிதி மைக்கேல் பெர்னாண்டோவினால் செய்திப்பத்திரிகை பதிக்கப்பட்டது. ~ஒன்லைன்| பதிப்பினைக் கூட சம்பந்தப்பட்டவர்கள் அகற்றிவிட்டதாக முகநூலில் கலாநிதி பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். கட்சியினுள் வதந்தியினாலான பிணக்குகளைக் கட்டுரையொன்று உறுதிப்படுத்திய பின்னர் விநியோகத்திலிருந்து செய்திப்பத்திரிகை மீளப்பெறப்பட்டதாக ~அத்த| இதழியலாளர் ஒருவரைக் குறிப்பிட்டு ~அத தெரன| இணையதளம் அறிக்கையிட்டிருந்தது
http://archive.srilankamirror.com/news/17774-aththa-withdrawn-from-circulation-office-sealed

.

## இ. வடக்கில் தமிழரை நினைவுகூருவதற்கு தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்

### 8. சமய நிகழ்ச்;சியிலிருந்து பக்தர்கள் விரட்டப்பட்டனர்

நொவம்பர் 25 அன்று, திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் மேற்கில் உள்ள முன்னம்-போடி-வெட்டையில் பிள்ளையார் ஆலயத்தில் (இந்து) ஒன்றுகூடியிருந்த பக்தர்களை இலங்கையின் இராணுவப் புலனாய்வாளர்கள் விரட்டியடித்தனர். தமிழ் (எல்.ரி.ரி.ஈ.) மாவீரர்களுக்கு காணிக்கை செலுத்துவதற்கே தமிழ் பக்தர்கள் ஒன்றுகூடியிருந்ததாக சிங்கள இராணுவ ஆளணியினர் சார்த்துரைத்ததுடன், பொங்கலைத் தயாரிப்பதற்கு சைவ பக்தர்கள் முற்பட்ட போது இராணுவத்தினர் பானையை உடைத்தனர்.
http://tamilnet.com/art.html?catid=13&artid=37521

### 9. ~உதயன்| செய்திப்பத்திரிகை குறித்து இலங்கைப் புலனாய்வாளர்கள் விசாரணையை ஆரம்பித்தனர்





எல்.ரி.ரி.ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தைக் கொண்டாடியதாக சார்த்துரைத்து, வட மாகாணத்தில் உள்ள முன்னணிவாய்ந்த செய்திப்பத்திரிகையான ~உதயன்| குறித்து விசாரணையொன்றை இலங்கையின் புலனாய்வு அலுவலர்கள் ஆரம்பிக்கவுள்ளதாக பீ.பீ.சி. சிங்கள சேவை அறிக்கையிட்டிருந்தது. பிரபாகரனின் புகைப்படத்தையும், "தமிழினத்தலைவரின் 60வது பிறந்த நாள்; எம் இனத்தின் இறைவன் அவதரித்த திருநாள்" என்ற வாசகங்களையும் சித்தரித்து இந்தியாவில் உள்ள அறிவித்தல் பலகையொன்றின் புகைப்படமொன்றை உள்ளடக்கிய கட்டுரையொன்றை யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட தினசரி வெளியிட்ட பின்னர் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

(மேலே: உதயன் முதல் பக்கம்: தமிழ் கார்டியனின் - புகைப்படம்: Tamil Guardian)
http://www.tamilguardian.com/article.asp?articleid=12949

### 10. மாவீரர் தினச் சுவரொட்டியை வைத்திருந்ததிற்காக தமிழ் இளைஞர் கைது

தமிழ் ஈழம் மாவீரர் தினச் சுவரொட்டிகளை வைத்திருந்ததாக கூறப்படும் தென்மராட்சியில் உள்ள மீசாலையைச் சேர்ந்த எஸ்.சுலக்ஷன் என்ற இளம் தமிழ் செயற்பாட்டாளர் ஒருவரைப் பொலிஸின் பயங்கரவாத விசாரணைப் பிரிவு விசாரித்துள்ளதாக தென்மராட்சியில் உள்ள பொலிசார் குறிப்பிடுகின்றனர். அவர் மோட்டார் சைக்கிள் ஒன்றை செலுத்திக் கொண்டிருந்த வேளை நொவம்பர் 25 இரவன்று இராணுவத்தினரினால் கைது செய்யப்பட்டார்.
http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37508

### 11. அச்சுறுத்தும் சுவரொட்டிகள் குறித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் நாமமிடப்பட்டனர்




நொவம்பர் 3 அன்று, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ராஜகுமார் மற்றும் நிவாஸ், தமிழ்ச்செல்வன், ஐங்கரன் மற்றும் பிரிட்டோ ஆகிய பெயர்களைக் கொண்ட நான்கு மாணவர்களுக்கு எதிராக மரண அச்சுறுத்தலைக் கொண்ட கையால் எழுதப்பட்ட சுவரொட்டிகள் பல்கலைக்கழக வளவில் ஒட்டப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. "சுடுவோம் நிவாஸ் தமிழ்செல்வன் ஐங்கரன் பிரிட்டோ மட்டும் ராசகுமார்" என கொச்சைத் தமிழில் ஒரு சுவரொட்டி குறிப்பிட்ட அதேவேளை, "அவர்கள் எல்.ரி.ரி.ஈ.க்கு புத்துயிரளிக்கின்றனர். நாம் அவர்களைக் கொல்வோம். மாவீரர் வாரம் கொண்டாடப்படுவதை நாம் அனுமதியோம்" என இன்னொன்று குறிப்பிட்டிருந்தது.

எல்.ரி.ரி.ஈ. மாவீரர் வாரம் வருடாந்தம் நொவம்பர் 27 அன்று கொண்டாடப்படுகின்றது. கடந்த காலத்தில் எல்.ரி.ரி.ஈ.இன் மாவீரர் தினத்தைக் கொண்டாடியதற்காக பெருமளவு மாணவச் செயற்பாட்டாளர்களை இலங்கையின் பாதுகாப்புப் படையினர் அச்சுறுத்தியும், தாக்கியும், கைது செய்தும் உள்ளனர்.

(மேலே: "அவர்கள் புலிளை உருவாக்குகின்றனர். நாம் அவர்களை சுடுவோம்" என சுரொட்டிகளில் ஒரு வாசகம் காணப்பட்டது. - புகைப்படம்: Tamil Guardian)
http://www.colombomirror.com/?p=1256

### 12. யாழ்ப்பாணத்தின் "தியாகச் சுடரை" ஏற்றிய மாணவர்களின் பெயர்களை இராணுவம் பெற்றது

நொவம்பர் 27 அன்று மாவீரர் தினத்தன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தின் வளவின் உள்ளே பிரசன்னமாகியிருந்த விரிவுரையாளர்களினதும், மாணவர்களினதும் பதிவுகளைச் சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு காவலர்களுக்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவு உத்தரவிட்டுள்ளது. இந் நடவடிக்கைக்கு பின்னாலுள்ள மாணவர்களை அடையாளம் காண்பதற்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவுடன் இணங்குமாறு பல்கலைக்கழ நிருவாகத்திற்கு பணிக்கப்பட்டிருந்தது. அத் தினத்தன்று பல்கலைக்கழகத்தின் உள்ளே அழிக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவு தூபியின் முன்னால் இராணுவம் பணிக்கமர்த்தப்பட்டிருந்தது. வளாகம் மீது கண்ணொன்றை வைத்திருப்பதற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் அயலில் உள்ள மாடிகளிலான வீடுகளிலும், கட்டிடங்களிலும் கூட அது குடியிருந்துள்ளது. ஆனால், பொது தியாகச் சுடரை சில மாணவர்கள் ஏற்றியுள்ளார்கள். மாவீரர் தினத்தன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் அயலில் காணப்பட்ட வாகனங்களின் இலக்கங்களை இலங்கை இராணுவம் பதிவுசெய்துள்ளது. வாகனங்களின் உரிமையாளர்களை அடையாளங் காணுமாறு பாதுகாப்பு காவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிருவாகத்தின் தகவலறிந்த வட்டாரங்கள் ~தமிழ்நெற்'றிடம் தெரிவித்திருந்தன.
http://tamilnet.com/art.html?catid=13&artid=37529

### 13. யாழ்ப்பாணத்தில் இராணுவக் கண்காணிப்பு அதிகரித்தது

தமிழர் மாவீரர் தினத்திற்கு முன்னர் வடக்கில் தமிழ் இளைஞர், முன்னாள் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோர் மத்தியில் பயப்பிராந்தியை உருவாக்குவதில் இலங்கையின் இராணுவம் ஈடுபட்டுள்ளதாக ~தமிழ்நெற்| அறிக்கையிட்டிருந்தது. அண்மைய நாட்களில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அருகில் நாச்சிமார் கோவிலடி மற்றும் கல்லடிச் சந்தி ஆகியவற்றில் இரு ~கண்காணிப்பு நிலையங்கள்' உருவாக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழக வளவில் இருந்து 500 மீட்டர்களுக்கும், ஒரு கிலோ மீட்டருக்கும் இடைப்பட்ட இடத்தில் உள்ள சிவிலியன் வீடுகள் இராணுவத்தினரால் பெறப்பட்டிருந்தன. நொவம்பர் 27 அன்று தமிழர் மாவீரர் தினத்தைக் கொண்டாடுவதிலிருந்து செயற்பாட்டாளர்களையும், மாணவர்களையும் தடுப்பதே புலனாய்வாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆரம்பப் பணியாகும் என அறிக்கையிடப்பட்டிருந்தது.
http://tamilnet.com/art.html?catid=13&artid=37507



யாழ்ப்பாணத்தில் இராணுவத்தை பணிக்கமர்த்தல் அதிகரித்தது: புகைப்படம் - Tamil Net

### 14. நினைவுதினச் செயற்பாடுகளுக்கு பயந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மூடப்பட்டது

நொவம்பர் 7ஆம் திகதி எல்.ரி.ரி.ஈ.இன் மாவீரர் தினத்தைக் குறிப்பதற்கான ஏதேனும் முயற்சியைத் தடுக்கும் நோக்கத்துடன் பல்கலைக்கழகச் சனசமூகம் மீது அதன் பிரசன்னத்தையும், அழுத்தத்தையும் இலங்கையின் இராணுவம் அதிகரித்த பின்னர், நொவம்பர் 25 முதல் டிசம்பர் 1 வரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் உத்தியோகபூர்வமாக மூடப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் புகுவழியின் இரண்டு பக்கங்களிலும் முழுமையான கட்டுப்பாட்டினை பல நூற்றுக்கணக்கான பெரும் ஆயுதபாணியிலான இராணுவ ஆளணியினர் எடுத்திருந்ததாகவும், அவர்களது விடுதிகளிலிருந்து கூட சகல மாணவர்களையும் வெளியேறுமாறு உத்தரவிட்டிருந்ததாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து அறிக்கைகளைக் குறிப்பிட்டு ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. பகுதியில் அதன் கால்நடை ரோந்தினையும், எழுந்தமான வீதிச் சோதனைகளையும் இராணுவம் அதிகரித்திருந்தது.
http://www.colombomirror.com/?p=1256

### 15. இலங்கை இராணுவ ஆளணியினரால் தமிழ் அரசியல் கட்சி அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டது

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகம் நொவம்பர் 26 அன்று உள்ளூர் நேரம் 4 மணிக்கு இலங்கையின் இராணுவ ஆளணியினரால் சுற்றிவளைக்கப்பட்டதாக கட்சி தெரிவித்தது. எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்திற்கு முந்திய தினத்தன்று இராணுவக் கண்காணிப்பு ஆரம்பமாகியது. அலுவலகத்தின் வாசலில் புலனாய்வு அலுவலர்கள் நிறுத்தப்பட்டிருந்ததாக கட்சி தெரிவித்திருந்ததுடன், இதன் விளைவாக, மிதமிஞ்சிய இராணுவ பிரசன்னத்தின் காரணமாக தமது வீடுகளை விட்டு வெளியேறுவதற்கு உள்ளூர்வாசிகள் அச்சமடைந்திருந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
http://www.tamilguardian.com/article.asp?articleid=12950

## ஈ. மாணவ செயற்பாட்டாளர்களின் அடக்குமுறை

### 16. பல்கலைக்கழக மாணவர்களின் கையொப்ப இயக்கம் தாக்கப்பட்டது

ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷவின் தலைமையிலான இளைஞர் அரசியல் இயக்கமொன்றான ~நீலப் படையைச்' சேர்ந்த குழுவானது கல்வியைத் தனியார்மயப்படுத்துவதற்கு எதிரான சுவரொட்டியொன்றுக்கு கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டிருந்த பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தைச் சேர்ந்த மாணவர்களைத் தாக்கியது. இவ்வியக்கத்திற்கு மாபெரும் மக்கள் ஆதரவு இருந்ததாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. பெருமளவு நகரங்களில் தடைகள் இருந்தபோதிலும், நாட்டின் பல நகரங்களில் இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.
http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7851:banner-for-education-causes-namals-thugs-to-stampede-&catid=42:smartphones&Itemid=74

## உ. எதிரணி அரசியல் கட்சிகளை அடக்குதல்

### 17. தமிழ் கட்சியின் நகர சபை உறுப்பினர்களைக் கட்சி மாறும்படி அரசாங்கம் அச்சுறுத்துகின்றது

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள நகர சபைகளின் தமிழ் உறுப்பினர்களை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்குமாறு, ஜனாதிபதியின் சகோதரர்களான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ ஆகியோரின் நேரடி ஆதிக்கத்தின் கீழ் செயல்படும் ~புலனாய்வு மற்றும் அரசியல் பணியாளர்கள்' தூண்டுவதற்கு முயல்வதாக ~தமிழ்நெற்'றில் உள்ள செய்தி அறிக்கையொன்று குறிப்பிடுகின்றது. கொழும்பைத் தளமாகக் கொண்ட தமிழ் செயற்பாட்டாளர்கள் ஊடாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பக்கத்திற்கு வடக்கில் உள்ள த.தே.கூ. நகர சபை தலைவர்களும், பிரதித் தலைவர்களும் வரவேண்டும் என்பதே இத் தூண்டுதலாகும் என யாழ்ப்பாணத்தில் உள்ள தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கை இராணுவத்தின் பாதுகாவலில் உள்ள முன்னாள் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினரான அவரது மகன் விடுவிக்கப்படுவதை வடக்கில் உள்ள இத்தகைய நகர சபை உறுப்பினர் ஒருவர் விரும்பினால், அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கட்சி மாற வேண்டும் என்ற விருப்பு வழங்கப்பட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
http://tamilnet.com/art.html?catid=13&artid=37524

## 18. எதிரணி அரசியல் கட்சிகளுக்கு எதிராக தேர்தல் வன்முறை



ஷமில ரணசிங்க ஆபத்தான நிலைமையொன்றில் இருக்கின்றார்;; புகைப்படம் - SriLanka Brief

இலங்கையின் பிரதான எதிரணியான ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) உள்ளூராட்சி உறுப்பினர் ஒருவரின் தலை மீது சுடப்பட்ட அதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆளும் கூட்டணியின் உயர்நிலையிலான அமைச்சர் ஒருவர் அரசாங்கத்திலிருந்து விலகி, வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொது எதிரணி அபேட்சகராகப் பெயரிடப்பட்டு சில மணித்தியாலங்களின் பின்னர் வாகனப் பாதுகாப்பணியொன்று தாக்கப்பட்டது. அறிக்கைகளின் படி, பயாகல, மக்கொனவில் வெள்ளிக்கிழமை மாலையில் எதிரணிக்கு அரசாங்க அமைச்சர்கள் கட்சி மாறியதை ஐ.தே.க. ஆதரவாளர்களின் குழுவொன்று கொண்டாடிய வேளை, காரொன்றில் வந்த அறியப்படாத ஆண்களைக் கொண்ட குழுவொன்று பேருவளை பிரதேச சபையின் முன்னாள் எதிரணித் தலைவரை அவரது தலையில் சுட்டது.
http://www.colombomirror.com/?p=1202